27th November 1970]

திரு. ஜி. சுவாமிநாதன் : அடுத்த தேர்தலைப் பொறுத்த வரையில், நம்முடைய குடும்ப நலத் திட்டத்தின் காரணமாக நமக்கு இடையூறு ஏற்படுமா என்பதையும் அப்படி ஏற்பட்டால், அதற்கு அரசு என்ன செய்ய யோசித்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த 39-க்கும் குறையாது என்று கருதுகிறோம். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், அப்போது ஆவன செய்வதற்கு அரசு முன்வரும்.

Theft of Idols

*2. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that a Judge of the High Court, Tamil Nadu has recommended to the Government to establish a Special Police Cell to prevent thefts of idols ; and

(**d**) if so, the action taken thereon ?

கடவுள் சிலைகள் களவு

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தெய்வச் சிலை திருட்டுக்களைத் தடுப்பதற்காக சிறப்புக் காவல் பிரிவு ஒன்றை அமைக்க அரசிடம் தமிழ் நாடு உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவர் பரிவுரை செய்துள்ளாரென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சென்னை உயர்நீதி மன்றம் கருத்து தெரிவித்ததற்கு முன்பாகவே அரசு இம்மாநிலத்தில் கடவுளர் சிலைகள் களவு போவதைத் தடுக்க முன்வந்துள்ளது. அரசு கடவுளர் சிலைகளின் களவுகளைப் புலனாய்வு செய்வதற்கென குற்றப்புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவின் கூடுதல் பணியாளர்களை நியமிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தத் தீர்ப்புக்கு முன்பாக எத்தனை பணியாளர்கள் இருந்தார்கள் ? தீர்ப்புக்குப் பிறகு எத்தனை பணியாளர்களை அதிகப்படுத்தியிருக்கிறோம் ? அவர்கள் என்னென்ன அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தற்சமயம் இந்தப் பணிக்காக இரண்டு இன்ஸ்பெக்டர்கள், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு தலைமைக் காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எண்ணிக்கை விவரத்தைப் பொறுத்த வரையில், முதலில் இருந்தது எவ்வளவு, இப்போது இருப்பது எவ்வளவு என்ற விவரம் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தீர்ப்புக்கு முன்னால் இதே பணியாளர்கள்தான் இருந்தார்கள். தீர்ப்புக்குப் பிறகும் அந்தப் பணியாளர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே பணியாளர்களை அதிகமாக்கவில்லை. நீதிபதி குறிப்பிட்டதைப் போல, தனியாக ஒரு 'செல்' அமைக்கப்படவில்லை. அதன் காரணமாக, பல இடங்களில், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில், இந்தத் திருட்டுகள் அதிகமாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை அரசு கவனத்தில் கொண்டு அதற்கான நடவடிக்கை எடுக்குமா, தனியாக ஒரு விசேஷப் பிரிவை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தீவிர முயற்சிக்கு அங்கத்தினரின் கேள்வி பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

College of Indian Systems of Medicine, Palayamkottai

*3. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that admissions are made only for Siddha system of medicine in the College of Indian Systems of Medicine, Palayamkottai ; and

(*b*) if so, whether there is any proposal to admit students for Ayurveda and Unani systems of medicine also ?

பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பாளையங்கோட்டையில் உள்ள இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவ முறை வகுப்புகளில் மட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், ஆயுர்தேவ, யுனானி மருத்துவ முறை வகுப்புகளிலும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த பி.ஐ.எம். மாணவர்களில் ஒரு பகுதியினர் 1967-ம் ஆண்டிலேயே வெளியே வந்துவிட்டார்கள். அதில் 50 மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியே வந்தார்கள். நவம்பரில் மூன்றாவது பகுதியினர் வெளியே வரவிருக்கிறார்கள். இந்த 50 டாக்டர்களைப் பொறுத்த வரையில், அத்தனை பேருக்கும் வேலை வாய்ப்பு இல்லாமல் உள்ள நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பஞ்சாயத்து யூனியன்களிலும் முனிசிபாலிடிகளிலும் வேலை அளிப்பதாக முன்னால் இந்த அரசாங்கம் தெரிவித்திருந்தது. ஆனால் இன்று வரையில் அரசாங்கத்தால் ஒருவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பதை மனதில் கொண்டு அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா ?